# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 8 ஆகஸ்டு – 2014 ₹1.00


## இளநிலைப் பட்டப்படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இளநிலைப் பட்டப் படிப்புகளான பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச்., பி.டெக். (உணவுத் தொழில்நுட்பம்) மற்றும் பி.டெக். (கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம்), ஆகியவற்றின் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு (2014–15), 30.07.2014, 31.07.2014 மற்றும் 01.08.2014 ஆகிய தினங்களில், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. மொத்தம் 1363 மாணவ விண்ணப்பதாரர்களுக்குக் கலந்தாய்வுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 408 மாணவ மாணவியர் கலந்தாய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அரசின் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னய்யா அவர்கள், பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டப்படிப்பில் முதல் 28 இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்குச் சேர்க்கை ஆணைகளை வழங்கி, சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி. ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் விழாத் தலைமையேற்றார்.

## அடுத்த தலைமுறை கால்நடை மருத்துவ மாணவர்கள் சிகிச்சை தொடர்பான சவால்களை எதிர்கொள்ள உதவும் பன்னாட்டுக் கருத்தரங்கு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் “அடுத்த தலைமுறை கால்நடை மருத்துவ மாணவர்கள் சிகிச்சை தொடர்பான சவால்களை எதிர்கொள்ள உதவும் ஆறாவது பன்னாட்டுக் கருத்தரங்கு” 03.07.2014 மற்றும் 04.07.2014ஆம் தேதிகளில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னய்யா அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, தமிழக அரசின் விலையில்லாக் கறவைமாடு மற்றும் ஆடு வழங்கும் திட்டம், தமிழகத்தின் கோழி வளர்ப்பு இல்லாத பகுதிகளில் கோழி வளர்ப்புத் திட்டம் மற்றும் அரசின் பிற நலத் திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் இ.ஆ.ப. அவர்கள் கருத்தரங்கின் ஆய்வுச் சுருக்க மலரை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, உரையாற்றினார். பங்களாதேஷ், சிட்டகாங் கால்நடை




மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.எஸ். மஹ்பூசுல் பாரி அவர்கள் முதன்மையுரை ஆற்றி, பல்கலைக்கழகத்தில் உள்ள சிகிச்சை வசதிகளைப் பாராட்டினார். அமெரிக்க விர்ஜினிய மேரிலேண்ட் மண்டலக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர் இளங்குமரன் சுப்பையா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ.ரா. சீனிவாசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். சிசிச்சை தொடர்பான 250 கட்டுரைகள் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன. அமெரிக்க விர்ஜினிய மேரிலேண்ட் மண்டலக் கால்நடை மருத்துவக் கல்லூரி, பங்களாதேஷின் சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உட்பட உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மொத்தம் 350 கால்நடை மருத்துவ மாணவர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## கால்நடை நோய்கள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கு



இந்தியக் கால்நடை நோயெதிர்ப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கத்தின் 21ஆம் ஆண்டு மாநாடு மற்றும் “உலக வர்த்தகம் மற்றும் வாழ்வாதார நிலையைப் பாதிக்கும் கால்நடை நோய்கள் –அவற்றின் உத்திகளும் தீர்வுகளும்” குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 17.07.2014 முதல் 19.07.2014வரை நடைபெற்றது. 19.07.2014அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னய்யா அவர்கள் விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் இ.ஆ.ப. அவர்கள் நிறைவுரை ஆற்றினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இந்தியக் கால்நடை நோயெதிர்ப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கத்தின் தலைவர் மற்றும் இந்தியக் கால்நடை ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநர் முனைவர் ஆர்.கே. சிங் அவர்கள் விஞ்ஞானிகளுக்கு இந்தியக் கால்நடை நோயெதிர்ப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கத்தின் ஆராய்ச்சி விருது அளித்துச் சிறப்பித்தார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விழா அமைப்புச் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் க. குமணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சியின் துவக்க விழாவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர்(பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். அமெரிக்காவின் விர்ஜினிய மேரிலேண்ட் மண்டலக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சிரில் ஆர். கிளார்க் அவர்கள் கருத்தரங்கச் சுருக்கத்தை வெளியிட்டுத் துவக்கவுரை ஆற்றினார். முனைவர் க. குமணன், முனைவர் கே.எஸ். பழனிசாமி மற்றும் முனைவர் அ. தங்கவேலு ஆகியோர் உரையாற்றினர். கருத்தரங்கில் 15 ஆராய்ச்சிக் கட்டுரைகள், 73 வாய்மொழிக் கட்டுரைகள் மற்றும் 130 சுவரிதழ்கள் தேசிய மற்றும் பன்னாட்டு ஆராய்ச்சியாளர்களால் வழங்கப்பட்டன.

## பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் நாய்கள் பற்றிய பன்னாட்டுப் பயிலரங்கு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டினை ஒட்டி “பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் நாய்களின் செயல்திறனை அதிகரித்தல்: உணவு, உடல்நலம் மற்றும் பராமரிப்பு” என்ற இரு நாள் பயிலரங்கம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கமேண்டோ படை மற்றும் மார்ஸ் இந்தியத் தனியார் நிறுவனம் ஆகியவைமூலம் 23.07.2014 மற்றும் 24.07.2014 ஆம் தேதிகளில் நடைபெற்றது. பயிலரங்கைத் தமிழ்நாடு கமேண்டோ படைத் தலைவர் திரு. சஞ்சே அரோரா இ.கா.ப. அவர்கள் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி. ஜெ. ஹரிகிருஷ்னண் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். பயிலரங்கின் தலைவர் மற்றும் பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சொ.ரா. சீனிவாசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பயிலரங்கின் சிறப்பு அழைப்பாளரான பிரான்ஸ், ஆல்போர்ட் தேசியக் கால்நடைப் பள்ளியின் பேராசிரியர் முனைவர் டோமினிக் கிரேண்டீன் அவர்கள் உரையாற்றினார். பயிலரங்கின் அமைப்புச் செயலாளர் முனைவர் ஏ.பி. நம்பி அவர்கள் பயிலரங்கின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசினார்.

## கோழியின நோய் குறித்த கருத்தரங்கு



பல்கலைக்கழக மைய ஆய்வகமும், கோழியின நோய்ப் பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பு ஆய்வகமும் இணைந்து “கோழியின நோய் விழிப்புணர்வு மற்றும் கோழி வளர்ப்பில் உயிர்ப் பாதுகாப்பு முறைகள்” குறித்த கருத்தரங்கைக் களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 25.07.2014அன்று நாமக்கல்லில் நடத்தின. தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புத் துறையின் ஆஸ்காடு இக்கருத்தரங்கிற்கு நிதியுதவி அளித்தது. நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்தார். மகாராஷ்டிரா தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் இணை முதன்மைச் செயல் அலுவலர் டாக்டர் பி. அன்பழகன் இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கருத்தரங்கக் கையேடு மற்றும் குறுந்தகட்டை வெளியிட்டார். அதனை, நாமக்கல் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் பி. சக்திவேலு அவர்கள் பெற்றுக்கொண்டார். போபால், முதுநிலை விஞ்ஞானி டாக்டர் எஸ். நாகராஜன், ஓய்வுபெற்ற பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மைய

இயக்குநர் முனைவர் ஏ.டி. வேணுகோபால், அமெரிக்க விர்ஜினிய மேரிலேண்ட் மண்டலக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர் இளங்குமரன் சுப்பையா, சுகுணா பிரைவேட் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் டாக்டர் என். ஜெகதீசன் ஆகியோர் சிறப்பு விரிவுரை வழங்கினர். முன்னதாக, பேராசிரியர் மற்றும் தலைவர், அமைப்புச் செயலாளர் முனைவர் பரிமள்ராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றி, இந்தியாவில் கோழியின நோய் குறித்து விரிவாக விளக்கிப் பேசினார். பேராசிரியர் மற்றும் தலைவர், அமைப்புச் செயலாளர் முனைவர் பி. மோகன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து கால்நடைப் பராமரிப்புத் துறைசார்ந்த 73 கால்நடை மருத்துவர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

## கல்விநிலையப் பணி

### சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி

### உலக விலங்குவழிப் பரவும் நோய்கள் தினம் – 2014

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தொற்றியல் துறைமூலம் அரக்கோணம் வட்டம், கணபதிபுரம் கிராமத்தில் 06.07.2014அன்று கால்நடை நல முகாம் நடத்தப்பட்டு, உலக விலங்குவழிப் பரவும் நோய்கள் தினம் கொண்டாடப்பட்டது. இம்முகாமில் 90க்கும் மேற்பட்ட கிடாரிக் கன்றுகளுக்குக் கன்றுவீச்சு நோய்க்கு எதிரான தடுப்பூசியும், தெருநாய்களுக்கு வெறிநோய்க்கு எதிரான தடுப்பூசியும் போடப்பட்டன. கால்நடை உதவி மருத்துவர் ஸ்ரீதர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் இணை மேலாளர் டாக்டர் மகாலட்சுமி ஆகியோர் முகாமில் பங்கேற்றனர்.

### தேசியப் பயிலரங்கு

கல்லூரியின் உயிர்நுட்பத் தகவல் மையம்மூலம் “உயிரியல் வரிசைமுறைகளில் முக்கியமாக அடுத்த தலைமுறை வரிசைமுறைகளைப் பகுப்பாய்தலில் உயிர்நுட்பத் தகவல் அணுகுமுறை” என்ற தேசியப் பயிலரங்கு, 24.07.2014 முதல் 26.07.2014வரை நடைபெற்றது. மொத்தம் 7 அறிவியலாளர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர்.

### நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### உள்ளிருப்புப் பயிற்சி

பங்களாதேஷ், சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் 53 மாணவர்களுக்கு உள்ளிருப்புப் பயிற்சி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 19.06.2014 முதல் 02.07.2014 வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் 19.06.2014அன்று பயிற்சியைத் துவக்கிவைத்தார். சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் பேராசிரியர் ஏ.எஸ். மஹ்பூசுல் பாரி அவர்கள் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரியைப் பார்வையிட்டு மரக்கன்றுகளை நட்டார். கல்லூரி முதல்வர் முனைவர் கொ.ஆ. துரைசாமி அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.

### கதழ்ஒலி ஆய்வில் தொழில்நுட்பப் பயிற்சி



கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறையில் பல்கலைக்கழகச்சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்புச் துறைசார்ந்த களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்கு “கதழ்ஒலி ஆய்வில் தொழில்நுட்பப் பயிற்சி” 21.07.2014முதல் 25.07.2014வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் செய்முறைப் பயிற்சிகள், விரிவுரைகள் அளிக்கப்பட்டன.

### திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

தமிழ்நாட்டின் இராஜபாளையம் மற்றும் கன்னி இன வேட்டை நாய்களின் குணாதிசயங்கள் குறித்த பல்கலைக்கழக ஆராய்ச்சிச் சுழல்நிதித் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் “வெறிநோய்த் தடுப்பூசி முகாம்”, திருநெல்வேலி மாவட்டத்தின் உக்கிரன்கோட்டை கிராமத்தில் 18.07.2014அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சே.பிரதாபன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் பேராசிரியர்கள் பங்கேற்று, கன்னி இன நாய்களுக்குத் தடுப்பூசி அளித்ததோடு கால்நடைகளுக்கும் சிகிச்சையளித்தனர். முகாமில் 210 நாய்களுக்கு வெறிநோய்க்கு எதிரான தடுப்பூசி போடப்பட்டது.

### கறவைமாடுகளில் வெப்ப அயர்ச்சியைக் போக்குவதற்கான பயிற்சி



தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் புதிய தொழில்நுட்பத்தைப் பரவலாக்குதல் திட்டத்தின்கீழ், கல்லூரியின் கால்நடை உடற்கூறியல் மற்றும் உயிர் வேதியியல் துறைமூலம் “கோடையில் கறவைமாடுகளில் ஏற்படும் வெப்ப அயர்ச்சியைத் தடுக்கும் முறைகளும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும் உத்திகளும் பற்றிய பயிற்சி” 30.06.2014முதல் 02.07.2014வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் 30 பயனாளிகள் பங்கேற்றனர். 02.07.2014அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் தலைமை வகித்து, பயனாளிகளுக்குச் சான்றிதழ் மற்றும் இடுபொருட்கள்

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செய்தி மடல் – ஆகஸ்டு – 2014**

Posted on 23.08.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.08.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

வழங்கினார். திருநெல்வேலி நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. கே. ராமலிங்கம் அவர்கள் பயிற்சிக் கையேடு வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்.

## ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### புதிய நிதியுதவித் திட்டங்கள்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்குக் கீழ்க்காணும் புதிய நிதியுதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1) தமிழ்நாடு அரசின்மூலம் ₹ 92.53 இலட்ச நிதியுதவியில் காவிரி நீர்ப்பாசனப் பகுதியிலுள்ள கால்நடைகள் நலனைப் பேணிகாக்கும் வகையில் “கால்நடை மருத்துவப் பல்கலைக் கழக நோயறி ஆய்வகம் அமைத்தல்” என்ற திட்டம்.

2) மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் (50:50பங்கு) ₹115 இலட்ச நிதியுதவியில் “கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர நிர்ணய ஆய்வகம் அமைத்தல்” என்ற திட்டம்.

3) பல்கலைக்கழகச் சுயநிதித் திட்டம்மூலமான ₹4.00 இலட்ச நிதியுதவியில் “தீவன ஆலை ஏற்படுத்துதல்”.

## விரிவாக்கப் பணிகள்

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, பால்பண்ணை உதவியாளர் மற்றும் தீவன ஆலை மேற்பார்வையாளர் ஆகிய செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு, கரூர், மேல்மருவத்தூர், சேலம் மற்றும் ஈரோடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; காட்டுப்பாக்கம், மையத் தீவனத் தொழில்நுட்பப் பிரிவு, குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையம், மாதவரம் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் கோழியின ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் ஜூலை 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 16 பேர் பதிவுசெய்து பயிற்சியை நிறைவுசெய்தனர்.

### பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகச் சுய தொழில்முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன் “இலாபகரமான கறவை மாடு வளர்ப்பும் பண்ணைக் கழிவுகளின் மறுசுழற்சியும்” என்ற வளாகப் பயிற்சியினை 14.07.2014 முதல் 21.07.2014 வரை நடத்தியது. பயிற்சியின் துவக்க விழாவில் ஊரகச் சுய தொழில்முனைவோர் பயிற்சி மைய இயக்குநர் திருமதி என். தமயந்தி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் திரு. முருகேசன் மற்றும் நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் திரு. ஏ. பார்த்தீபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். 30 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

### கால்நடை நல முகாம்

மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் கால்நடை நல முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை வந்தவாசி வட்டம், தென்சேந்தமங்கலம் கிராமத்தில் 05.07.2014அன்றும், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், அரசாணிமங்கலம் கிராமத்தில் 19.07.2014அன்றும் நடத்தியது. முகாமில் மொத்தம் 662 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### பணி ஓய்வு



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி. சந்திரசேகரன் அவர்கள் 31.07.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 22.07.1954இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 06 மாதமும் பணிபுரிந்துள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் திரு. எம். தம்பிராஜ் அவர்கள் 31.07.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 20.07.1956இல் பிறந்த இவர், 32 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்.